**ஐ.டி.எண். 05/2026 15.07.2026**

**தொ.த.சாட்சி – 1 திரு.ஜீலிலட்சுமி..**

**குறுக்கு விசாரணை**

எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. என்னிடம் காண்பிக்கப்பட்ட ஆவணம் W3 என்ன விபரம் உள்ளது என்று எனக்கு தெரியாது. வழக்கில் தாக்கல் செய்துள்ள மனு நான் போடவில்லை என்றால் சரிதான். வழக்கில் போட்டுள்ள மனுவில் இந்த ஆவணத்தை நிர்வாகத்தில் சமர்ப்பித்ததாக சொல்லவில்லை என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. W3 ஆவணம் நிர்வாகத்திற்கு சார்வு செய்யப்பட்டதற்கு எந்த அத்தாட்சியும் இல்லை என்று சொன்னால் சரிதான். தொழிலாளர் தரப்பு ஆவணம் மூன்று நிர்வாகத்திற்கு கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. என்ன நிவாரணம் கூறி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் பென்ஷன் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்னர் எனது கணவர் தொழிலாளர் அலுவலகத்திற்கு வழக்கு போட்ட விபரம் தெரியாது. பேச்சுவார்த்தையின் பொழுது என்ன நடந்தது என்ன ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டது என்பதை பற்றி எனக்கு தெரியாது.எனது கணவர் 02.05.1994ல் எதிர்மனுதாரிடம் வேலைக்கு சேர்ந்தார் என்று சொன்னால் சரிதான். 2024 ஆம் வருடத்தில் அவர் பணி ஓய்வு பெற்றார் மாதம் தேதி எனக்கு தெரியாது. வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் அவர் குறிப்பிட்ட வருடம் வேலை பார்க்காத காரணத்தினால் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியில்லை.நான் தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down before/by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him/her to be correct.

PACKIAJOTHI Digitally signed by PACKIAJOTHI Date: 2026.07.15 17:47:42 +0530

Presiding Officer